Q.C-090

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Survey Department Test – Sub-Inspector of Survey and Land Records Test – Paper – I (Without Books) | 013 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. The approved new sub divisions are entered in ——————— register
அங்கீகரிக்கப்பட்ட புதிய உட்பிரிவுகள் ——————— பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

(A) 6(2) Register
6(2) பதிவேடு

(B) 8A Register
8ஏ பதிவேடு

(C) F Line Application Register
புல எல்லை மனுப் பதிவேடு

(D) Taluk Account No. 7 Register
வட்டக் கணக்கு எண். 7 பதிவேடு

2. Taluk Stone depot register shall be maintained in form No. ———————
வட்டக் கல் இருப்புபதிவேடு ——————— படிவத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

(A) Form I
படிவம் I

(B) Form III
படிவம் III

(C) Form II
படிவம் II

(D) Form IV
படிவம் IV

3. As per revised Rules in the Tamil Nadu Survey manual Vol. IV the Close Block in Town Survey shall be formed having an extent about ———————
தமிழ்நாடு நிலஅளவை விதித் தொகுப்பு தொகுதி IV ல் வரையறை செய்யப்பட்டுள்ள திருத்திய விதிகளின்படி நகர அளவையில் அடர்த்தியான பிளாக்குகள் ——————— பரப்பளவு கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

(A) 2 Hectares
2 ஹெக்டேர்

(B) 1 Hectares (or) 0.5 in very density Blocks
1 ஹெக்டேர் (அ) 0.5 ஹெக்டேர் மிகவும் அடர்த்தியான பிளாக்குகளில்

(C) 3 Hectares
3 ஹெக்டேர்

(D) 4 Hectares
4 ஹெக்டேர்

4. In a channel or Odai or River fields, ———————— marks shall be used for indicate the direction of water flows.
வாய்க்கால் (அ) ஓடை (அ) ஆறு போன்றபுலங்களில் அதன் நீரோட்டம் செல்லும் திசையை குறிப்பிட ———————— குறி பயன்படுத்தப்படுகிறது.

(A) Arrow Marks
அம்புக் குறி

(B) Cross marks
சிலுவை குறி

(C) Round mark
வட்டவடிவ குறி

(D) Square mark
சதுரவடிவ குறி

5. What is the Square root of the sum 49729?
49729 என்ற தொகையின் வர்க்க மூலம் என்ன?

(A) 223

(B) 486

(C) 272

(D) 607

6. The distance measured between two stations, is 2549 links. How many times were the arrows exchanged?
இரு நிலையங்களுக்கு இடையே சங்கிலியால் அளவிடப்பட்ட தூரம் 2549 லிங்க்ஸ் எனில் ஊசிகள் எத்தனை முறை கைமாறியிருக்கும்?

(A) 20 times
20 முறை

(B) 26 times
26 முறை

(C) 25 times
25 முறை

(D) 10 times
10 முறை

7. In the Town Block Map, the scale of drawing the Close Blocks is
நகர பிளாக் வரைபடத்தில் நெருக்கமான பிளாக்குகளை வரைவு செய்யும் அளவு

(A) 1:1000
1:1000

(B) 1 : 2000
1 : 2000

(C) 1 : 500
1 : 500

(D) 1:200 (or) 1:100 in very density Blocks
1:200 (அ) 1:100 மிகவும் அடர்த்தியான பிளாக்குகளில்

8. The proposals with the forms XIV, XV for area error are to be sent to ———— officer
பரப்புப் பிழைக்குரிய படிவம் XIV, XV தயார் செய்து முன்மொழிவுகளை எந்த அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(A) Municipal Commissioner
நகராட்சி ஆணையாளர்

(B) Block Development Officer
வட்டார வளர்ச்சி அலுவலர்

(C) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

9. After surveying a village, the survey numbers are to be given from ———— direction in a Village map
ஒரு கிராமத்தில் சர்வே செய்தவுடன் கிராம வரைபடத்தில் ————, திசையில் இருந்து புல எண்கள் கொடுக்க வேண்டும்.

(A) Northern East
வடகிழக்கு

(B) Southern East
தென்கிழக்கு

(C) Southern West
தென்மேற்கு

(D) Northern West
வடமேற்கு

10. While surveying a field, the fields like Stream, Channel, Road are to be fixed as ———— field
ஒரு நிலத்தை சர்வே செய்யும் போது ஓடை, கால்வாய், பாதை, சாலை போன்றவற்றை அமைக்கும் புலத்திற்கு ———— புலம் என்று பெயர்.

(A) Long narrow Field
நீண்ட குறுகிய புலம்

(B) Minor Circuit Field
சிறு சுற்றுப் புலம்

(C) Khandam
கண்டம்

(D) Village Map
கிராம வரைபடம்

11. The process of surveying a field which has been surveyed already is known as
நில அளவை செய்யப்பட்ட பகுதியை மீண்டும் நில அளவை செய்வது ———— ஆகும்.

(A) Initial Survey
முதல் நில அளவை

(B) Re – survey
மறு நில அளவை

(C) Street Survey
தெரு நில அளவை

(D) Topographical survey
ஸ்தலவிவர நில அளவை

12. The details of name, extent, type (dry or wet), Poromboke and hamlet villages of a village in a Taluk are recorded in ——————— register
ஒரு வட்டத்தின் மொத்த கிராமங்கள், அவைகளின் பரப்பு, நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, துணை கிராமங்கள் போன்றவை ——————— பதிவேட்டில் குறிக்கப்பட்டிருக்கும்.

(A) Taluk A Register
வட்ட அ பதிவேடு

(B) A Register
அ பதிவேடு

(C) Adangal
அடங்கல்

(D) Chitta
சிட்டா

13. In a Traverse, the sum of angles is not to be greater or lesser than
ஒரு டிராவர்ஸில் கோணங்களின் மொத்த கூடுதல் டிகிரி ——————— க்கு குறையவோ கூடவோ இருக்கக் கூடாது.

(A) (2N – 4)90

(B) 4(N – 8)70

(C) 8(N – 5)60

(D) 2(N+4)90

14. The Survey of India was started in the year
இந்திய நில அளவைத் துறை ——————— ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

(A) 1767 AD
கி.பி. 1767

(B) 1867 AD
கி.பி. 1867

(C) 1802 AD
கி.பி. 1802

(D) 1876 AD
கி.பி. 1876

15. The Special Postal Stamp released on memorate of 200 years of the Great Trigonometrical Survey on
தேசிய பெரிய முக்கோண நில அளவை செய்யப்பட்ட 200 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு அஞ்சல் தலை ——————— வெளியிடப்பட்டது.

(A) 28.06.2010

(B) 28.06.2004

(C) 10.04.2004

(D) 26.01.2004

16. The Great Trigonometrical Survey work was started on the day of
தேசிய பெரிய முக்கோண நில அளவைப் பணி துவங்கப்பட்ட நாள்

(A) 15.08.1947

(B) 10.04.1767

(C) 10.04.1802

(D) 26.01.1956

17. The Great Trigonometrical Survey work was started by the
தேசிய பெரிய முக்கோண நில அளவைப் பணி ———————— என்பவரால் துவக்கப்பட்டது.

(A) Sir. George Everest
சர். ஜார்ஜ் எவெரஸ்ட்

(B) James Rannel
ஜேம்ஸ் ரேனல்

(C) Lord Robbert Clive
லார்டு. ராபர்ட் கிளைவ்

(D) Major. William Lampton
மேஜர். வில்லியம் லாம்டன்

18. The first survey work of Great Trigonometrical survey in the base line between from ———————— to ———————— was measured
தேசிய பெரிய முக்கோண நில அளவைப் பணியில் முதல் அடிப்படைக் கோடு ———————— முதல் ———————— வரையில் அளவு செய்யப்பட்டது.

(A) From Dehradun to Calcutta
டேராடூன் முதல் கொல்கத்தா வரை

(B) From Kanyakumari to Kashmir
கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை

(C) From Chennai to Hyderabad
சென்னை முதல் ஹைதராபாத் வரை

(D) From St. Thomas Mount to Perumbakkam
புனித தாமஸ் மலையிலிருந்து பெரும்பாக்கம் வரை

19. The Great Trigonometrical Survey work was completed in the year
தேசிய பெரிய முக்கோண நில அளவைப் பணி ———————— ஆண்டில் முடிக்கப்பட்டது.

(A) 1867 AD
கி.பி. 1867

(B) 1911 AD
கி.பி. 1911

(C) 1870 AD
கி.பி. 1870

(D) 1876 AD
கி.பி. 1876

20. The method following for measurement, when the ground is uneven is called as
இரு நிலையங்களுக்கிடையே தரை சமதளமற்று மேடு பள்ளங்களில் நிறைந்த இடங்களில் கடைபிடிக்கும் முறை ———————— எனப்படும்.

(A) Stepping method
படிகட்டு முறை

(B) Hill method
மலை முறை

(C) Traverse method
டிராவர்ஸ் முறை

(D) Ray method
ரே முறை

21. The scale of map for the field having 8 hectares is to be plotted in
8 ஹெக்டேர் பரப்புடைய புலத்தின் வரைபடம் வரைவு செய்ய அளவு விகிதம்

(A) 1mm : 5000 mm
1மிமீ : 5000 மிமீ

(B) 1mm : 2000 mm
1மிமீ : 2000 மிமீ

(C) 1mm : 500 mm
1மிமீ : 500 மிமீ

(D) 1mm : 1000 mm
1மிமீ : 1000 மிமீ

22. What is the previous Survey Act followed in Survey Department before the Act VIII of 1923?
நில அளவை சட்டம் VIII/1923 முன்பாக நில அளவைத் துறையில் கடைபிடிக்கப்பட்ட சட்டம் யாது?

(A) Act XXVI of 1907
சட்டம் XXVI /1907

(B) Act IV of 1897
சட்டம் IV /1897

(C) Act VIII of 1901
சட்டம் VIII /1901

(D) Act VIII of 1897
சட்டம் VIII /1897

23. What is Metadata?
மெட்டா டேட்டா என்பது என்ன?

(A) Information about an object
பொருள் சார்ந்த தகவல்

(B) Data format for Unix
யுனிக்ஸ் தகவல் பதிவு

(C) Data format of Arc/Info
ஆர்க்/இன்போ தகவல் அமைப்பு

(D) Graphical Data
வரைபட தகவல் பதிவு

24. The Main object of Revenue Survey or Cadastral Survey is
வருவாய் நில அளவை (அ) கடாஸ்டிரல் சர்வேயின் முக்கிய நகரம்

(A) To fix Land Tax and assessment ratio and collection, and to find out land holders who liable to pay the Land Revenue
நிலத்தின் தீர்வை விதிக்கவும், வரி விகிதத்தை முடிவு செய்யவும், அதை செலுத்த வேண்டிய நபரை அடையாளம் காணவும்

(B) For Registration Department purpose
பத்திர பதிவுத் துறை பயன்பாட்டிற்காக

(C) For Sale of Land
நில விற்பனைக்காக

(D) for P.W.D purpose
பொதுப் பணித்துறை பயன்பாட்டிற்காக

25. During the Town Survey, the collection of total cost of Survey work shall be calculated by ——————— extent ratio for the Close, Medium and Open Blocks
நகர அளவைப் பணியில் நில அளவை செலவினம் கணக்கிடும் பொழுது பரப்பளவில் அடர்த்தியான பிளாக்குகள், நடுத்தர பிளாக்குகள் மற்றும் திறந்த வெளி பிளாக்குகள் இடையே அதன் பரப்பளவுகளை ——————— விகிதத்தில் கணக்கிட வேண்டும்.

(A) 1 Hectare = 1 Hectare for Close Block: 1 Hectare = ¼ Hectare for Medium Block; 1 Hectare = 1/12 Hectare for Open Block
1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - அடர்த்தி பிளாக்கு; 1 ஹெக்டேர் = ¼ ஹெக்டேர் - நடுத்தர பிளாக்கு; 1 ஹெக்டேர் = 1/12 ஹெக்டேர் - திறந்த வெளி பிளாக்கு

(B) 1 Hectare = 1 Hectare for Close Block; 1 Hectare = 1 Hectare for Medium Block; 1 Hectare = 1 Hectare for Open Block
1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - அடர்த்தி பிளாக்கு; 1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - நடுத்தர பிளாக்கு; 1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - திறந்த வெளி பிளாக்கு

(C) 1 Hectare = ¼ Hectare for Close Block: 1 Hectare = ½ Hectare for Medium Block; 1 Hectare = 1 Hectare for Open Block
1 ஹெக்டேர் = ¼ ஹெக்டேர் - அடர்த்தி பிளாக்கு; 1 ஹெக்டேர் =1/2 ஹெக்டேர் - நடுத்தர பிளாக்கு; 1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - திறந்த வெளி பிளாக்கு

(D) 1 Hectare = 1 Hectare for Close Block; 1 Hectare = 2 Hectare for Medium Block; 1 Hectare = 4 Hectare for Open Block
1 ஹெக்டேர் = 1 ஹெக்டேர் - அடர்த்தி பிளாக்கு; 1 ஹெக்டேர் = 2 ஹெக்டேர் - நடுத்தர பிளாக்கு; 1 ஹெக்டேர் = 4 ஹெக்டேர் - திறந்த வெளி பிளாக்கு

26. During the Town Survey, the cost of Survey work shall be paid by the Government and Municipality at ——————— ratio
நகர அளவையில் நில அளவை செலவினைத்தை அரசும், நகராட்சியும் ——————— விகிதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(A) Municipality 2/3 share and Government 1/3 share
நகராட்சி 2/3 பங்கு அரசு 1/3 பங்கு

(B) Municipality 50% share and Government 50% share
நகராட்சி 50 சதவீத பங்கு அரசு 50 சதவீத பங்கு

(C) Municipality 75% share and Government 25% share
நகராட்சி 75 சதவீத பங்கு அரசு 25 சதவீத பங்கு

(D) Municipality 60% share and Government 40% share
நகராட்சி 60 சதவீத பங்கு அரசு 40 சதவீத பங்கு

27. During the Maintenance of Survey Marks ———————— percentage of stones in the total maintanable stones shall be maintained in the Stone Depot as stock.
நில அளவை குறிகள் பராமரிப்பு பணியின் போது மொத்த பராமரிப்பு கற்களில் ———————— சதவீதம் கல் இருப்பு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) 20% for Wet lands and 10% for the Dry lands
நஞ்சை நிலங்களுக்கு 20 சதவீதமும், புஞ்சை நிலங்களுக்கு 10 சதவீதமும்

(B) 2% for Wet lands and 1 % for the Dry lands
நஞ்சை நிலங்களுக்கு 2 சதவீதமும், புஞ்சை நிலங்களுக்கு 1 சதவீதமும்

(C) 25% of Wet lands and 10% for the Dry lands
நஞ்சை நிலங்களுக்கு 25 சதவீதமும், புஞ்சை நிலங்களுக்கு 10 சதவீதமும்

(D) 1% for Wet lands and 2% for the Dry lands
நஞ்சை நிலங்களுக்கு 1 சதவீதமும், புஞ்சை நிலங்களுக்கு 2 சதவீதமும்

28. During Land Acquisition Process the ———————— copies Temporary Subdivisions and ———————— copies of permanent Sub division records shall be prepared.
நில எடுப்பு பணியில் தற்காலிக உட்பிரிவு ஆவணங்கள் ———————— பிரதிகளும், நிரந்தர உட்பிரிவு ஆவணங்கள் ———————— பிரதிகளும் தயாரிக்கப்பட வேண்டும்.

(A) Temporary Sub division Records 3 Copies and Permanent Sub division Records 6 copies
தற்காலிக உட்பிரிவு ஆவணங்கள் 3 பிரதிகளும், நிரந்தர உட்பிரிவு ஆவணங்கள் 6 பிரதிகளும் தயார் செய்யப்பட வேண்டும்

(B) Temporary Sub division Records 6 Copies and Permanent Sub division Records 4 copies
தற்காலிக உட்பிரிவு ஆவணங்கள் 6 பிரதிகளும், நிரந்தர உட்பிரிவு ஆவணங்கள் 4 பிரதிகளும் தயார் செய்யப்பட வேண்டும்

(C) Temporary Sub division Records 2 Copies and Permanent Sub division Records 3 copies
தற்காலிக உட்பிரிவு ஆவணங்கள் 2 பிரதிகளும், நிரந்தர உட்பிரிவு ஆவணங்கள் 3 பிரதிகளும் தயார் செய்யப்பட வேண்டும்

(D) Temporary Sub division Records 1 Copy and Permanent Sub division Records 2 copies
தற்காலிக உட்பிரிவு ஆவணங்கள் 1 பிரதியும், நிரந்தர உட்பிரிவு ஆவணங்கள் 4 பிரதிகளும் தயார் செய்யப்பட வேண்டும்

29. During the Land Acquisition process the 9(2) notice shall be served to the each land holder at the time of ————————
நில எடுப்பு பணியின் போது 9(2) நோட்டீஸ் ———————— சமயத்தில் சார்வு செய்யப்பட வேண்டும்.

(A) After publication of No. 6 under L.A Act
நில எடுப்பு சட்டபடி 6 பிரிவின்படி விளம்பரம் செய்த பிறகு

(B) After publication of 4 under L.A Act
நில எடுப்பு சட்டபடி 4 பிரிவின்படி விளம்பரம் செய்த பிறகு

(C) After award passed
தீர்வாணை வழங்கப்பட்ட பிறகு

(D) After changes carried out in Village Accounts
கிராம கணக்குகளில் மாறுதல்கள் பதிவு செய்த பிறகு

30. During the Land Acquisition process, the final Notification under ———————— Act shall be notified after the award passed and all changes carried out in the Village and Taluk Accounts.
நில எடுப்பு பணியில் அவார்டு பாஸ் செய்த பிறகு, வட்ட மற்றும் கிராம கணக்குகளில் மாறுதல்கள் பதிவு செய்த பிறகு, ———————— சட்டப்படி இறுதி அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

(A) Under section 6 of S and B Act
நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் பிரிவு 6

(B) Under section 5 of S and B Act
நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு 5

(C) Under section 13 of LA Act
நில எடுப்பு சட்டம் பிரிவு 13

(D) Under section 13 of S and B Act
நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு 13

31. In which Register in Taluk Office, the applications for patta transfer are received through the Sub Registrar's office is entered?
சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக வரப்பெறும் பட்டா மாறுதல் மனுக்கள் வட்ட அலுவலகத்தின் எந்த பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது?

(A) Village Account No. 5(1)
கிராம கணக்கு எண். 5(1)

(B) Taluk Copy of 10(1)
வட்ட நகல் 10(1)

(C) Taluk Copy of 2C
வட்ட நகல் 2சி

(D) Taluk Account 6(1)
வட்டக் கணக்கு எண் 6(1)

32. Special Register in Form No. VI showing the details of
சிறப்பு பதிவேடு எண். 6 பதிவேட்டில் உள்ள பதிவுகள் காட்டும் விவரங்கள்

(A) Village wise Missing Stone
கிராமம் வாரியாக காணாமல் போயுள்ள கற்களின் பட்டியல்

(B) Village wise B memo cases
கிராமம் வாரியாக பி மெமோ விவரம்

(C) Village wise DCB account in C.S.M(A) survey advance Account
கிராமம் வாரியாக சி.எஸ்.எம்.(ஏ) சர்வே முன்பணம் கேட்பு, வசூல், நிலுவை

(D) Patta application details
பட்டா மனுக்கள் விவரம்

33. How to give sub division numbers while a survey number 14/1 is split into 2 sub divisions during the course of involving subdivision in the occation of patta transfer?
பட்டா மாறுதல் சமயத்தில் ஏற்படும் உட்பிரிவு மாறுதல் சமயத்தில் 14/1 என்ற உட்பிரிவு 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்படுமானால் கொடுக்கப்பட வேண்டிய உட்பிரிவு எண்.

(A) 14/ 1A & 14/1B
(B) 14/2, 14/3
(C) 14/1 – 1
(D) 14/1 – 2

34. In a Triangle in chain surveying, should not have any angle less than ———— Degree
சங்கிலி அளவையின் போது அளவு செய்யப்படும் முக்கோணத்தின் எந்தவொரு கோணமும் ———— டிகிரிக்கு குறையக்கூடாது.

(A) 60 degree
60 டிகிரி

(B) 40 degree
40 டிகிரி

(C) 45 degree
45 டிகிரி

(D) 30 degree
30 டிகிரி

35. The ————————— software is used for computerisation of land records in Tamil Nadu.
தமிழ்நாட்டில் நில பதிவேடுகள் கணினிமயமாக்கம் செய்ய ————————— மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

(A) Microsoft Office Excel
மைக்ரோ சாப்ட் ஆபிஸ் எக்சல்

(B) Tamil Nilam software developed by NIC
தேசிய தகவல் மையம் உருவாக்கிய தமிழ்நிலம் மென்பொருள்

(C) Microsoft Office Word
மைக்ரோ சாப்ட் ஆபிஸ் வோர்டு

(D) Microsoft Office Power Point
மைக்ரோ சாப்ட் பவர்பாயின்ட்

36. Collab land software is now used for ————————— purpose.
கொலாப்லேன்ட் மென்பொருள் ————————— பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

(A) Digitization Traverse Record
டிராவர்ஸ் ஆவணங்களை மின்ணனுமயமாக்க

(B) Digitization of Field Measurement Sketches
புல அளவு வரைபடங்களை மின்ணனுமயமாக்க

(C) Downloading data from DGPS
டி.ஜி.பி.எஸ் கருவியிலிருந்து தரவு பதிவிறக்கம் செய்ய

(D) Downloading data from Lica Total station
லைக்கா டோட்டல் ஸ்டேஷன் கருவியிலிருந்து தரவு பதிவிறக்கம் செய்ய

37. Maintainable stone details are marked in ————————— map in the villages
கிராமத்தில் பராமரிக்கப்பட வேண்டிய நில அளவை கற்களின் விவரம் குறிப்பிடப்பட்டுள்ள வரைபடம்

(A) "D" Sketch
கல் வரைபடம்

(B) Village Map
கிராம வரைபடம்

(C) Eye Sketch
கண் வரைபடம்

(D) Location Sketch
இடம் காணும் வரைபடம்

38. Relinguishment of rights over the land are entered in ————————— Register.
உரிமை கைவிடல் தொடர்பான விவரங்களை பதிவு செய்யும் பதிவேடு

(A) Taluk Account No. 5
வட்டக் கணக்கு எண். 5

(B) Special Account No.5
சிறப்பு பதிவேடு எண். 5

(C) Village Account No. 5
கிராம கணக்கு எண். 5

(D) Taluk Account No. 8
வட்டக் கணக்கு எண். 8

39. How many copies of GPS field book shall be prepared?
ஜி.பி.எஸ். புலப்புத்தகம் எத்தனை நகல்கள் தயார் செய்ய வேண்டும்?

(A) One
ஒரு நகல்

(B) Two
இரு நகல்கள்

(C) Three
மூன்று நகல்கள்

(D) Eight
எட்டு நகல்கள்

40. Why the restriction of length in offsets should be followed?
குத்தளவு எடுக்க தூர கட்டுப்பாடு ஏன் பின்பற்றப்பட வேண்டும்?

(A) for clear vision
தெளிவான பார்வைக்காக

(B) for accuracy
துல்லியமான அளவு செய்ய

(C) for reduce measurement timing
அளவிடும் நேரத்தை குறைக்க

(D) for plotting reasons
வரைதல் காரணத்திற்காக

41. The Cadastral survey is also known as
கடாஸ்ட்டிரல் சர்வே என்பது ———————— என்றும் அறியப்படும்.

(A) Town Survey
நகர அளவை

(B) Arial Survey
வானியல் அளவை

(C) Topo Survey
விளக்கி அளவை

(D) Revenue Survey
வருவாய் நில அளவை

42. The broad arrow cut on all stones should be at least ———————— long and ———————— deep.
நில அளவை கற்களில் பதிக்கப்படும் அம்புகுறி குறைந்தபட்சம் ———————— அளவுள்ளதாக இருக்க வேண்டும்.

(A) 6 cm long and ½ cm deep
6 செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(B) 10 cm long and ½ cm deep
10 செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(C) 15 cm long and ½ cm deep
15 செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(D) 20 cm long and ½ cm deep
20 செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

43. Formation of No. of Triangles in simple – triangle system is based on its ————————— in the field.
சாதாரண முக்கோண முறையில் புலங்களில் அமைக்கப்படும் முக்கோணங்களின் எண்ணிக்கை அதன் ————————— ஐ பொறுத்து அமையும்.

(A) No. of sides
பக்கங்களின் எண்ணிக்கை

(B) No. of subdivisions
உட்பிரிவுகளின் எண்ணிக்கை

(C) No. of field junctions
புலசந்திப்புகளின் எண்ணிக்கை

(D) No. of offsets
குத்தளவுகளின் எண்ணிக்கை

44. Formation of No. of Triangles in Diagonal and Offset system is based on its ————————— in the field.
மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறையில் புலங்களில் அமைக்கப்படும் முக்கோணங்களில் எண்ணிக்கை அதன் ————————— ஐ பொறுத்து அமையும்.

(A) No. of sides
பக்கங்களின் எண்ணிக்கை

(B) No. of subdivisions
உட்பிரிவுகளின் எண்ணிக்கை

(C) No. of field junctions
புல சந்திப்புகளின் எண்ணிக்கை

(D) No. of offsets
குத்தளவுகளின் எண்ணிக்கை

45. The register dealing with transfers from one head of classification to another shall be maintained in ————————— register.
நிலத்தின் வகைப்பாடு மாற்றம் செய்யப்படும் நேர்வுகளில் பதிவு செய்ய வேண்டிய பதிவேடு

(A) No. 6 Register
எண். 6 பதிவேடு

(B) No. 7 Register
எண். 7 பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

46. The application received for grant of land Assignment shall be registered in the accounts in ————————— Register.
நில ஒப்படை வழங்கக் கோரி வரப்பெற்ற மனுக்களை ————————— பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6 Register
எண். 6 பதிவேடு

(B) No. 7 Register
எண். 7 பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

47. The application received for Transfer of Registry directly from the land owner shall be registered in the accounts in ———————— Register.
பதிவு மாறுதல் செய்திடக் கோரி நில உரிமையாளர்களிடமிருந்து நேரடியாக வரப்பெற்ற மனுக்களை ———————— பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6 (2) Register
எண். 6 (2) பதிவேடு

(B) No. 6 (1) Register
எண். 6 (1) பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

48. The 15(2) Acknowledgement Register is maintained by the
15(2) ஒப்புதல் பதிவேடு ———————— ஆல் பராமரிக்கப்படுகிறது.

(A) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Rural Welfare Officer
ஊர் நல அலுவலர்

(D) Panchayat Board President
ஊராட்சி மன்றத் தலைவர்

49. Now in Online patta Transfer System, the application for transfer registry shall be submitted through ———————— in online method
இணையவழி பட்டா மாறுதல் முறையில் மனுக்கள் ———————— மூலமாக இணையவழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(A) Common Service Centres
பொது சேவை மையங்கள்

(B) Village Administrative Officers
கிராம நிர்வாக அலுவலர்

(C) By manual to Taluk Office
கைப்பிரதியாக வட்ட அலுவலகத்தில்

(D) By manual to the Surveyor
கைப்பிரதியாக நில அளவரிடத்தில்

50. After applications received to the Surveyor's login for transfer of registry in involving sub division cases, the Firka surveyor shall do in first step in online
நில அளவரின் கணக்கிற்கு இணைய வழியில் பெறப்பட்ட உட்பிரிவு செய்ய வேண்டிய மனுக்களின் மீது குறுவட்ட அளவர் எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கையாக ———————— செய்ய வேண்டும்.

(A) Fix the date of proposed field visit in online
புலத்தை தணிக்கை செய்ய உள்ள உத்தேச தேதியை நிகழ்நிலையில் பதிவு செய்ய வேண்டும்

(B) Prepare the subdivision sketches
உட்பிரிவு வரைபடங்களை தயார் செய்ய வேண்டும்

(C) Transfer the application to the L.R.D
வட்ட வரைவாளருக்கு மனுவினை மாறுதல் செய்ய வேண்டும்

(D) Transfer the application to the V.A.O
கிராம நிர்வாக அலுவலருக்கு மனுவினை மாறுதல் செய்ய வேண்டும்

51. In the Village Account No. 3, the details of ———————— are entered by the Village Administrative Officer.
கிராம கணக்கு எண் 3-ல் கிராம நிர்வாக அலுவலரால் ———————— விவரங்கள் பதிவு செய்யப்படுகிறது.

(A) Patta Transfer details
பட்டா மாறுதல்கள் விவரங்கள்

(B) Land Lease Details
நில குத்தகை விவரங்கள்

(C) Cultivation details
சாகுபடி விவரங்கள்

(D) Encroachment details
ஆக்கிரமண விவரங்கள்

52. Rain fall Account are entered by the Village Administrative Officer in the ———————— Account.
மழை பெய்த விவரம் கிராம நிர்வாக அலுவலரால் ———————— பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

(A) Village Account No. 2
கிராம கணக்கு எண். 2

(B) Village Account 1A
கிராம கணக்கு எண். 1ஏ

(C) Village Account No. 20
கிராம கணக்கு எண். 20

(D) A Register
அ பதிவேடு

53. Tree Patta details are entered in the ——————— Account by the Village Administrative Officer
மரப்பட்டா விவரங்கள் கிராம நிர்வாக அலுவலரால் ——————— பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

(A) Village Account No. 14
கிராம கணக்கு எண். 14

(B) Village Account No.1
கிராம கணக்கு எண். 1

(C) Village Account No. 5
கிராம கணக்கு எண். 5

(D) Village Account No. 2C
கிராம கணக்கு எண். 2சி

54. The angle created by the vertical line cut the horizontal line is ——————— Degree.
படுக்கை கோட்டினை செங்குத்து கோடு வெட்டும் போது ஏற்படும் கோணம் ——————— ஆகும்.

(A) 180 Degree
180 டிகிரி

(B) 90 Degree
90 டிகிரி

(C) 270 Degree
270 டிகிரி

(D) 45 Degree
45 டிகிரி

55. The line having shortest distance between two points is called as
இரண்டு புள்ளிகளுக்கிடையே உள்ள மிக குறைவான தூரத்தை கொண்ட கோடு ——————— எனப்படும்

(A) Slanding line
சாய்வு கோடு

(B) Parallel line
இணை கோடு

(C) Straight line
நேர்க்கோடு

(D) Diagonal line
மூலைவிட்ட கோடு

56. When a formation of triangles in the Survey fields, the diagonal line should not be
நில அளவை புலத்தின் அமைக்கப்படும் முக்கோணத்தில் அதன் மூலைவிட்டக் கோடுகள் ——————— ஆக இருக்க கூடாது.

(A) Crossed each other
ஒன்றுக்கொன்று குறுக்கிடக் கூடாது

(B) Equal
சமமாக இருக்கக் கூடாது

(C) Similar
ஒரே மாதிரியாக இருக்கக் கூடாது

(D) Parallel
இணையாக இருக்கக் கூடாது

57. The angle substracted from the angle of 90 Degree is called
90 டிகிரியிலிருந்து கழித்து வரும் கோணம் —————— எனப்படும்.

(A) Substantive Angle
மிகை நிரப்பு கோணம்

(B) Rightangle
செங்கோணம்

(C) Component Angle
நிரப்பு கோணம்

(D) Triangle
முக்கோணம்

58. The angle substracted from the angle of 180 Degree is called
180 டிகிரியிலிருந்து கழித்து வரும் கோணம் —————— எனப்படும்.

(A) Substantive Angle
மிகை நிரப்பு கோணம்

(B) Rightangle
செங்கோணம்

(C) Component Angle
நிரப்பு கோணம்

(D) Triangle
முக்கோணம்

59. No stone should be accepted of which any one of dimension differe from the size ordered for supply by more than
நில அளவை கற்கள் வழங்குவதற்காக உத்தரவு வழங்கப்பட்ட கற்களில் அளவுகளில் எந்த ஒரு அளவும் —————— அளவுக்கு மேல் வித்தியாசப்படுமானால் அம்மாதிரியான கற்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

(A) 5 cm
5 செமீ

(B) 10 cm
10 செமீ

(C) 2.5 cm
2.5 செமீ

(D) 1 cm
1 செமீ

60. The form stone pass list is
கற்கள் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலுக்கான படிவம் —————— ஆகும்.

(A) Form No. 3
படிவம் எண். 3

(B) Form No. 6
படிவம் எண். 6

(C) Form No. 31
படிவம் எண். 31

(D) Form No. 30
படிவம் எண். 30

61. The form Register of Stone Receipt and expended details maintained by the Range Sub Inspector of Survey is
சரக சார் ஆய்வாளரால் கற்கள் வரபெற்றவை மற்றும் செலவிடப்பட்டவை குறித்த பதிவேடு பராமரிக்க வேண்டிய படிவம் ———————— ஆகும்.

(A) Form No. 3
படிவம் எண். 3

(B) Form No. 6
படிவம் எண். 6

(C) Form No. 31
படிவம் எண். 31

(D) Form No. 30
படிவம் எண். 30

62. The dimension of plummed hole drilled in the centre on the upper surface of stones to be planted at the theodolite stations is
தியோடலைட் நிலையங்களில் நடப்படும் நில அளவை கற்களின் தலைப் பகுதியில் பதிக்கப்பட வேண்டிய பிளமட் துளையின் அளவு ———————— ஆகும்.

(A) 3 cm deep and 5 cm diameter
3 செமீ ஆழம் மற்றும் 5 செமீ விட்டம்

(B) 2.5 cm deep and 2 cm diameter
2.5 செமீ ஆழம் மற்றும் 2 செமீ விட்டம்

(C) 5 cm deep and 3 cm diameter
5 செமீ ஆழம் மற்றும் 3 செமீ விட்டம்

(D) 2.5 cm deep and 5 cm diameter
2.5 செமீ ஆழம் மற்றும் 5 செமீ விட்டம்

63. How many years of uninterrupted enjoyment shall be considered for patta transfer without title document as per R.S.O.31.
R.S.O.31 ன் படி நில உரிமை பத்திரங்கள் இன்றி தடையற்ற அனுபவத்தின் அடிப்படையில் பட்டா மாற்றத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய அனுபவ காலம்

(A) 30 years
30 ஆண்டுகள்

(B) 50 years
50 ஆண்டுகள்

(C) 12 years
12 ஆண்டுகள்

(D) 15 years
15 ஆண்டுகள்

64. Universal Transverse Mercator (UTM) is now being used in India after the
யுனிவர்சல் டிரான்ஸ்வர்ஸ் மெர்கேட்டர் இந்தியாவில் ____________ க்கு பிறகு பயன்படுத்தப்படுகிறது.

(A) National Satellite Policy 2005
தேசிய செயற்கைகோள் கொள்கை 2005

(B) National Map Policy 2005
தேசிய வரைபட கொள்கை 2005

(C) National Map Policy 2010
தேசிய வரைபட கொள்கை 2010

(D) National Survey Policy 1923
தேசிய நில அளவை கொள்கை 1923

65. As per National Map Policy ____________ System is adopted for civilian purpose.
தேசிய வரைபட கொள்கையின்படி சிவிலியன் பயன்பாட்டிற்கு ____________ பயன்படுத்தப்படுகிறது.

(A) WGS84 Datum System
டபுள்யு.ஜி.எஸ். 84 டேட்டம் சிஸ்டம்

(B) Everest Ellipsoid Measurements
எவரெஸ்ட் எலிப்சாய்டு அளவுகள்

(C) International Terrestrial Reference Frame
இன்டர்நேஷனல் டெரஸ்டிரியல் ரெபரன்ஸ் பிரேம்

(D) Conventional Terrestrial Pole
கன்வன்ஷனல் டெரஸ்டிரியல் போல்

66. National Map Policy communicated to the Tamil Nadu Survey Department by the Survey of India in the year
தேசிய வரைபட கொள்கை இந்திய சர்வே துறையினால் தமிழ்நாடு நில அளவைத் துறைக்கு ____________ ஆண்டில் தெரிவிக்கப்பட்டது.

(A) 2012
(B) 2007
(C) 2010
(D) 2009

67. In the ordinary course of Land Acquisition process, the Sub division Records shall be prep ———————— notification under Land Acquisition Act.
சாதாரணமாக நில எடுப்பு பணியின் போது உட்பிரிவு ஆவணங்கள் ———————— நடவடிக்கைக்கு பிறகு செய்யப்பட வேண்டும்.

(A) 4(1) Notification
4(1) அறிவிப்பிற்கு பிறகு

(B) After award notification
அவார்டு வெளியிட்ட பிறகு

(C) After 13 Notification
13 ஆம் அறிவிப்பிற்கு பிறகு

(D) After 6 Notification
6 ம் பிரிவு அறிவிப்பிற்கு பிறகு

68. In the initial stage of any Government work such as Assignment, Land Acquisition work on proposal, the scruitiny of Sub division records is called
நில ஒப்படை, நில எடுப்பு போன்ற அரசுப் பணிகளின் போது உட்பிரிவு ஆவணங்கள் துவக்கத்தில் செய்யப்படும் பொழுது ———————— என அழைக்கப்படுகிறது.

(A) Pre – Scruitiny
முன் கூராய்வு

(B) Final Scruitiny
இறுதி கூராய்வு

(C) Temporary scruitiny
தற்காலிக கூராய்வு

(D) Post approval
பிந்தைய ஒப்புதல்

69. Inspection percentage of Range Sub Inspector of Survey is ———————— in measurement work.
அளவுப் பணியில் சரக சார் ஆய்வாளரின் தணிக்கை சதவீதம் ———————— ஆகும்.

(A) 25%

(B) 15%

(C) 30%

(D) 10%

70. As per revised rules, the modern survey records i.e. soft copy of Geographical Co – ordinates, legacy data and maps generated may be preserved in the offices of
திருத்திய விதிகளின்படி, நவீன நில அளவை ஆவணங்களான புவியியல் ஆயத்தூரங்களின் விவரங்கள் அடங்கிய மென்பொருள் வடிவ நகல், மரபு வழி தரவுகள், மற்றும் கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட வரைபடங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய அலுவலகங்கள்

(A) State Archives, State and District N.I.C, C.S.O. and Regional Survey Offices
மாநில ஆவண காப்பகம், மாநில மாவட்ட தேசிய தகவல் மையங்கள், மத்திய நில அளவை அலுவலகம், மண்டல நில அளவை அலுவலகம்

(B) State Archives and Central Survey Office
மாநில ஆவண காப்பகம் மற்றும் மத்திய நில அளவை அலுவலகம்

(C) Central Survey Office and State N.I.C.
மத்திய நில அளவை அலுவலகம் மற்றும் மாநில தேசிய தகவல் மையம்

(D) District Survey Office and Regional Survey Office
மாவட்ட நில அளவை அலுவலகம் மற்றும் மண்டல நில அளவை அலுவலகம்

71. As per revised Rules, in modern Survey, to facilitate viewing purpose only by the public, the linear and area data and maps are to be published in the
திருத்திய விதிகளின்படி நவீன நில அளவையில், பொதுமக்கள் பார்வையிட்டு தெரிந்துகொள்வதற்கு மட்டும், வரைபடங்கள், கோட்டின் அளவுகள் மற்றும் பரப்பளவு விவரங்கள் ——————— மூலம் வெளியிடப்பட வேண்டும்.

(A) Government State Gazette
மாநில அரசிதழில்

(B) Government District Gazette
மாவட்ட அரசிதழில்

(C) In Website
இணையதளத்தில்

(D) In Newspaper
செய்திதாட்களில்

72. The measurement of obstructed lines may be divided into ——————— classes.
தடைபட்ட கோடு அளவிடு முறை ——————— வகைகளை கொண்டதாக பிரிக்கலாம்.

(A) Four
நான்கு

(B) Five
ஐந்து

(C) Six
ஆறு

(D) Seven
ஏழு

73. In whose name the land in question is registered in the Government Accounts of the village is called as
ஒரு கிராமத்தில் பிரஸ்தாப நிலத்தின் உரிமையாளராக அரசு ஆவணங்களின் பதிவு செய்யப்பட்டுள்ள பெயர் ——————— என அழைக்கப்படுகிறது.

(A) Lessee
குத்தகைதாரர்

(B) Agent
முகவர்

(C) General Power of Attorney
பொது அதிகாரம் பெற்றவர்

(D) Registered Holder
பதிவு பெற்ற உரிமையாளர்

74. A mark or object erected, made, employed or specified by a survey officer to indicate or determine or assist in determining the position or level of any point to points is called as
ஒரு இடத்தின் புள்ளியிலிருந்து மற்றொரு இடத்தின் புள்ளியின் அமைவிடத்தை முடிவு செய்வதற்காக அல்லது முடிவு செய்ய உதவுவதற்காக நில அளவை அலுவலர்களால் நடப்பட்ட (அ) உருவாக்கப்பட்ட (அ) அமர்த்தப்பட்ட (அ) குறிப்பிடப்பட்ட குறியீடு ——————— எனப்படும்.

(A) Symbol
சின்னங்கள்

(B) Survey Mark
நில அளவைக் குறி

(C) Toys
பொம்மைகள்

(D) Survey Instruments
நில அளவைக் கருவிகள்

75. Under the which section of Tamil Nadu Survey and Boundaries Act VIII of 1923 powers have been delegated to the Government to survey of any place and to appoint survey Officer?
ஒரு இடத்தை நில அளவை செய்வதற்கும், அதற்காக நில அளவை அலுவலரை நியமனம் செய்திடவும் தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் VIII/1923-ன் எந்த பிரிவு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றது?

(A) Section 17
பிரிவு 17

(B) Section 6(1)
பிரிவு 6(1)

(C) Section 4
பிரிவு 4

(D) Section 3
பிரிவு 3

76. The ———————— Notice has been given to the parties of registered holders on decision made by the Deputy inspector of Survey as per Survey and Boundaries Act
நில அளவை எல்லைகள் குறித்த சட்டத்தின் துணை ஆய்வாளர் எடுத்த முடிவின் அடிப்படையில் ———————— நோட்டீஸ் பதிவு பெற்ற நிலை உரிமையாளருக்கு வழங்கப்படுகிறது.

(A) Section 9(2)
பிரிவு 9(2)

(B) Section 13(1)
பிரிவு 13(1)

(C) Section 8
பிரிவு 8

(D) Section 11
பிரிவு 11

77. The Transfer of Registry in full number cases is ordered by the
முழு புல மாறுதலுக்குட்பட்ட இனங்களில் பதிவு மாறுதல் உத்தரவு ———————— ஆல் வழங்கப்படுகிறது.

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

78. The Transfer of Registry in involving sub division cases is ordered by the
புல உட்பிரிவு மாறுதலுக்குட்பட்ட இனங்களில் பதிவு மாறுதல் உத்தரவு ———————— ஆல் வழங்கப்படுகிறது.

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

79. In an appeal petitions on transfer of registry, orders have been passed by the ———————— in first appeal.
பதிவு மாறுதல் தொடர்பான முதல் மேல்முறையீட்டு மனுக்களின் மீது ———————— ஆல் உத்தரவு வழங்கப்படுகிறது.

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

80. In a second appeal in the Transfer of Registry cases, on the orders in first appeal, the orders have been passed by the
பதிவு மாறுதல் தொடர்பான முதல் மேல்முறையீட்டு மனுக்களின் மீது செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது ———————— ஆல் உத்தரவிடப்படுகிறது.

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

81. The forum appealiate authority next to the District Revenue Officer is
மாவட்ட வருவாய் அலுவலருக்கு அடுத்துள்ள மேல்முறையீட்டு மன்றம் ———————— ஆகும்.

(A) The Collector
மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) Commissioner of Land Administration
நில நிர்வாக ஆணையர்

(C) The High Court
உயர்நீதி மன்றம்

(D) The Lower Civil Court
கீழமை உரிமையியல் நீதிமன்றம்

82. The Fasli year is the period from ———————— to ————————
பசலி ஆண்டு என்பது ———————— முதல் ———————— முடிய உள்ள காலமாகும்.

(A) 1st January to 31st December
ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 முடிய

(B) 1st April to 31st March
ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய

(C) 1st June to 31st May
ஜூன் 1 முதல் மே 31 முடிய

(D) 1st July to 30th June
ஜூலை 1 முதல் ஜூன் 30 முடிய

83. The Mean of Sea level is calculated for the period of every ———————— years
கடல் மட்ட சராசரி ———————— ஆண்டுகள் காலத்திற்கு ஒருமுறை கணக்கிடப்படுகிறது.

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) 5 years
5 ஆண்டுகள்

(C) 10 years
10 ஆண்டுகள்

(D) 15 years
15 ஆண்டுகள்

84. Tender for supply of demarcation stones shall be published in District Gazettee in the Form as in
நில அளவை கற்கள் வழங்குவதற்கான ஒப்பந்த புள்ளி மாவட்ட அரசிதழில் ———————— படிவத்தில் வெளியிடப்பட வேண்டும்.

(A) Appendix No. 31
இணைப்பு படிவம் 31

(B) Appendix No. 24
இணைப்பு படிவம் 24

(C) Appendix No. 26
இணைப்பு படிவம் 26

(D) Appendix No. 30
இணைப்பு படிவம் 30

85. The width of channel, cart track etc., less than 4 meters shall be demarcated and measured as
4 மீட்டருக்கும் குறைவான அகலமுடைய வாய்க்கால், வண்டிப் பாதை போன்றவற்றை ———————— ஆகக் இடக்குறிப்பு செய்து அளவு செய்யப்பட வேண்டும்.

(A) Detail mark
விளக்கி குறியாக

(B) Sub division
உட்பிரிவாக

(C) Separate survey field
தனி நில அளவை புலமாக

(D) Minor circuit field
சிறு சுற்று புலமாக

86. The width of channel, cart track etc., greater than 10 meters shall be demarcated and measures as
10 மீட்டருக்கும் அதிகமான அகலமுடைய வாய்க்கால், வண்டிப் பாதை போன்றவற்றை ———————— ஆகக் இடக்குறிப்பு செய்து அளவு செய்யப்பட வேண்டும்.

(A) Detail mark
விளக்கி குறியாக

(B) Sub division
உட்பிரிவாக

(C) Separate survey field
தனி நில அளவை புலமாக

(D) Minor circuit field
சிறு சுற்று புலமாக

87. A Notification in the District Gazettee regarding completion of survey work are notified under section ———————— of survey and Boundaries Act.
நில அளவைப் பணி முடிவுற்றது குறித்த அறிவிப்பு மாவட்ட அரசிதழில் நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டப் பிரிவு ———————— ன் கீழ் வெளியிடப்படுகிறது.

(A) Section 4
பிரிவு 4

(B) Section 9(2)
பிரிவு 9(2)

(C) Section 13
பிரிவு 13

(D) Section 5
பிரிவு 5

88. The F Line Application Register is maintained in the ———————— year wise.
புல எல்லை மனுப் பதிவேடு ———————— ஆண்டு வாரியாக பராமரிக்கப்படுகிறது.

(A) Fasli year
பசலி ஆண்டு

(B) Financial year
நிதியாண்டு

(C) Calendar year
காலண்டர் ஆண்டு

(D) Education year
கல்வியாண்டு

89. A survey in which the boundaries, area, reputed ownership and position of each holding are determined for the first time is called as
எல்லைகள், பரப்பளவு, அதன் உரிமையாளர், மற்றும் அதன் அமைப்பு ஆகியவற்றை முதன்முறையாக நில அளவை செய்து நிர்ணயிக்கப்படும் நில அளவை ———————— எனப்படும்.

(A) Initial Cadastral Survey
முதன்மை கடாஸ்ட்டிரல் நில அளவை

(B) Supplemental Survey
துணை நில அளவை

(C) Resurvey
மறு நில அளவை

(D) Street Survey
தெரு நில அளவை

90. Proportional fraction between actual field measurement, size and scale of drawing is called as
புலத்தின் பூமியின் உள்ள அளவுகள் மற்றும் அமைப்பிற்கு ஈடாக வரைபடத்தில் வரையப்படும் அளவுக்கு உள்ள விகிதாச்சார பின்னம் ———————— எனப்படும்.

(A) Representative Fraction
பிரதிநிதித்துவ பின்னம்

(B) Hypotenuse
கர்ணம்

(C) Perpendicular
உயரம்

(D) Angle
கோணம்

91. The Register in form prescribed in Appendix XVI is called
இணைப்பு படிவம் XVI -ல் அமைந்துள்ள பதிவேடு ———————— என்றழைக்கப்படும்.

(A) Register of Survey errors corrected
திருத்தப்பட்ட நில அளவை பிழைகள் குறித்த பதிவேடு

(B) Register of Copy Application
நகல் மனு பதிவேடு

(C) Register of F line Application
புல எல்லை மனு பதிவேடு

(D) Register of classification changes
வகைப்பாடு மாறுதல் பதிவேடு

92. In the maintenance of Town Survey, The Registers in Form No. V, IX, XI and XII will be maintained for ———————— years
நகர அளவை பராமரிப்பில் படிவம் எண். V, IX, XI மற்றும் XII ஆகிய பதிவேடுகள் ———————— ஆண்டுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

(A) Permanently
நிரந்தரமாக

(B) Five years
ஐந்தாண்டுகள்

(C) Three years
மூன்றாண்டுகள்

(D) One year
ஓராண்டு

93. The Taluk level C.S.M. (A) Permanent Advance and DCB Accounts are maintained in the ———————— office.
வட்ட அளவிலான சி.எஸ்.எம்.(ஏ) நிரந்தர முன்பணம், கேட்பு, வசூல் நிலுவை குறித்த கணக்கு ———————— பராமரிக்கப்படுகிறது.

(A) Municipal Office
நகராட்சி அலுவலகம்

(B) Central Survey Office
மத்திய நில அளவை அலுவலகம்

(C) Statistical Office
புள்ளியியல் அலுவலகம்

(D) Taluk Office
வட்டாட்சியர் அலுவலகம்

94. C.S.M (A) Survey Advance Accounts are maintained in the ———————— Register
சி.எஸ்.எம்.(ஏ) முன் பணம் கணக்கு ———————— பதிவேட்டில் பராமரிக்கப்படுகிறது.

(A) Taluk Special Register No. 5
வட்ட சிறப்பு பதிவேடு எண் 5

(B) Taluk Account No. 5
வட்ட கணக்கு எண் 5

(C) 8A Register
8ஏ பதிவேடு

(D) F Line Register
புல எல்லை பதிவேடு

95. Which rule fix the responsibility of the Village Administrative Officer for the prevention of survey marks under the S and B Act VIII of 1923?
1923 ஆம் வருட நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் VIII ன்படி கிராம நிர்வாக அலுவலர் நில அளவைக் குறிகளை கடமை பொறுப்பினை நிர்ணயிக்கும் பிரிவு யாது?

(A) Section 16
பிரிவு 16

(B) Section 10(1)
பிரிவு 10(1)

(C) Section 14
பிரிவு 14

(D) Section 8(1)
பிரிவு 8(1)

96. The Table of which a number has to be raised to produce another number based on to the power of 10 is called as
10-ன் மடங்கினை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு எண்ணை உருவாக்கும் அட்டவணை ———————— என்றழைக்கப்படுகிறது.

(A) Logarithms Table
மடக்கை அட்டவணை

(B) Cubic Root Table
கன மூல அட்டவணை

(C) Square Root Table
வர்க்க மூல அட்டவணை

(D) Table of Multiply ratio
பெருக்கலின் விகித அட்டவணை

97. The average length of all the solar days of the year is called as
ஆண்டு முழுவதும் உள்ள சூரிய நாளின் சராசரி ———————— எனப்படும்.

(A) Zenith Distance
ஜெனித் தூரம்

(B) Equation Time (or) Mean Time
சராசரி நேரம்

(C) The Declination
டெக்னிலேசன்

(D) Meridian
மெரிடியன்

98. Parallel Ruler used for ———————— purpose.
இணைகர ரூலர் ———————— க்கு பயன்படுத்தப்படுகிறது.

(A) Inking Sketches
வரைபடங்களை மையிடுவதற்கு

(B) Measuring distance
தொலைவுகளை அளவு செய்வதற்கு

(C) Comparing Measurement
அளவுகளை சரிபார்ப்பதற்கு

(D) Bearing Plotting
துருவ கோண வரைபடம் வரைவதற்கு

99. Area Square paper used for ———————— purpose.
பரப்பு சதுர தாள் ———————— க்கு பயன்படுத்தப்படுகிறது.

(A) to measure angles in the field
புலத்தில் கோண அளவுகளை அளவிட

(B) for calculating Area
பரப்பளவினை கணக்கிட

(C) to measure length measurements
நீள அளவுகளை அளவிட

(D) to drawn angle plotting sketches
கோண வரைபடங்களை வரைவு செய்ய

100. The present Survey and Boundaries Act is enacted in the year of
தற்போதுள்ள நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் ———————— ஆண்டில் உருவாக்கப்பட்டது.

(A) 1924

(B) 1932

(C) 1923

(D) 1947